அதிகாரி ஐ.ஜி. அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். ஆகவே இது பற்றி ஒத்தி வைப்புப் பிரேரணை தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கி இருக்கிறார்கள். ஆகவே இதற்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதுகின்றேன். மேலும் பேரவை விதி 50 (viii)-ன் படி, இது அரசின் அன்றாட அலுவலுக்கு உட்பட்டது என்பதால், இத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (3) அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் தேதி நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி பேரவையின் அலுவல் ஏற்கனவே அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளபடி, நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### (ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 156 (3)-க்கு இணங்க 1 முதல் 25-A வரை எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்களை 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் நாள், புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள்ளும் இதர மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்களை 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் நாள் சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள்ளும் சட்டப்பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று அறிவிக்கின்றேன்.

### (இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.